# தமிழ்நாடு எங்கும் முத்தமிழறிஞர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவுநாள் அஞ்சலி!



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூர் வடக்கு ஒன்றியம் சார்பில் காவல்கிணறு பேருந்து நிறுத்தத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தலைமையில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது.நிகழ்வில் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் பாஸ்கர், சாந்தி,ஒன்றிய கவுன்சிலர் கோவிசன், சுதாகர்,அனிஸ்டன்,சாம் மற்றும் கழக நிர்வாகிகள்,கிளைக் கழக உறுப்பினர்கள், தொண்டர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்டம் இராதாபுரம் மேற்கு ஒன்றியம் சார்பில் பேருந்து நிலையம் முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப் பட்டது.உடன் ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி,ஒன்றிய அவை தலைவர் ராமையா,துணை செயலாளர்கள் கென்னடி,செழியன், வாழவந்த கணபதி பாலன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர். தொடர்ந்து அணைக்கரை மெர்சிஹோம் வளர்ச்சி குன்றியோர் களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்டம் நாங்குநேரி மேற்கு ஒன்றிய கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. உடன் ஒன்றிய செயலாளர் சுடலைக்கண்ணு, மாவட்ட பொறுப்பு குழு உறுப்பினர் சந்திரகலா உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சிவகாசி மாநகர தி.மு.க.வின் சார்பில், மாநகர திமுக செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன் தலைமையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையில் இருந்து துவங்கிய அமைதிப் பேரணி வடக்கு ரத வீதி கிழக்கு ரத வீதி வழியாக சிவன்கோயில் முன்பு முடிவுற்றது. செயலாளர் அலங்கரிக்கப்பட்ட தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து ஐம்பெரும் முழக்கம் உறுதி மொழி எடுக்கப்பட்டது. பின்பு பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வனராசா, மாநகர மேயர் சங்கீதா, துணை மேயர் விக்னேஷ்ப்பிரியா, ஒன்றிய கழக செயலாளர் விவேகன்ராஜ், பகுதி கழக செயலாளர்கள் செல்வம், மாரீஸ்வரன், கருணாநிதி பாண்டியன், அப்துல் முத்தலிப், மாநகர துணை செயலாளர்கள் பாக்ய லட்சுமி,ரவிச்செல்வம், மாநகர பொருளாளர் வெள்ளைத்துறைப்பாண்டியன், மாவட்ட துணை செயலாளர் ராமமூர்த்தி, மாவட்ட அவைத் தலைவர் தங்கராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 8வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு ஒன்றிய கழக செயலாளர் வே.பூபாலசிங்கம் தலைமையில் நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூர் பழைய பேருந்து நிலையம் அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டது. உடன் வள்ளியூர் பேரூர் செயலாளர் சேதுராமலிங்கம் ஊராட்சி ஒன்றிய முன்னாள் துணைத் தலைவர் பரமேஸ்வரன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 8வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ்.பாஸ்கரன் தலைமையில் நிர்வாகிகள் ஆதி.அழகர்சாமி, கோதண்டபாணி, ஆனந்தகுமார், செந்தில், பில்லூர் கார்த்தி ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மல்லாங்கிணறு கூட்டுறவு வங்கி அருகில், விருதுநகர் வடக்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் மல்லாங்கிணறு போஸ் தலைமையிலும், பேரூராட்சி சேர்மன் துளசிதாஸ், பேரூர் கழக செயலாளர் முருகேசன் முன்னிலையிலும் கலைஞர் அவர்களின் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது. மேற்படி நிகழ்ச்சியில் கழக முன்னணி நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், பேரூராட்சி கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் மரவமங்கலத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் 8வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு தெற்கு ஒன்றிய கழக செயலாளர் யோக.கிருஷ்ணகுமார் தலைமையில் நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



மதுரை மாநகர் மாவட்ட வடக்கு தொகுதி இளைஞரணி சார்பில் மதுரை செய்தியாளர்கள் அரங்கில் இயங்கி வரும் கலைஞர் நூலகத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தில் மாணவ மாணவிகள் அன்னாரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தனர்.